| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1 – சித்ரா | அ.வ.எண்.290/2018 | 05.01.2024 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

4. நான் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதி பேராணை மனுவில் எனக்கு அளவுகள் குறித்த புல வரைபடம் எதுவும் எனக்கு கொடுக்கவில்லை என்றும் அதனால் ஆக்கிரமிப்பை அகற்றக்கூடாது என்றும் தான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் நாங்கள் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை எங்கள் இடத்தில் தான் கட்டிடம் கட்டியுள்ளோம் என்று தான் மனு தாக்கல் செய்திருந்தோம். எனக்கு புல எண்.318/37 ஐ தவிர வேறு எந்த புல எண்ணிலும் எனக்கு உரிமையில்லை என்றால் புல எண்.318/36 மற்றும் புல எண்.318/37 க்கு இடையில் நடைபாதை உள்ளது அது எனக்கும், புல எண்.318/36 ன் உரிமையாளருக்கும் உரிமையுள்ளது. நான் வழக்குரையில் புல எண்.318/36 என்று தான் சொல்லியுள்ளேன் என்றாலும் தற்போது புல எண்.318/37 என்று பொய்யாக கட்சி செய்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் வழக்குரையில் 7 வது பத்தியில் எனது சொத்து புல எண்.318/37 ல் கட்டுப்பட்டது என்றும் தங்கவேல் என்பவருக்கு சொந்தமான வீடு புல எண்.318/36 என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். மேற்படி காரணங்களால் எனக்கு வழக்கு சொத்தை பொருத்து சரியான புரிதல் இல்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் வழக்குரையில் உள்ள சொத்து விவரத்தில் புல எண்.318/36 என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் மேற்படி சொத்தை பொருத்து எனக்கு எந்த உரிமையும் இல்லாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.